முருகப்பெருமான் துணை

**மகான் இசைஞானியார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

02.02.2023, வியாழக்கிழமை

1. ஞானவான்கள்தனை படைக்க
   ஞானிகளுக்கு பூசை துவக்கி
   தானதரும வழிகளும் கூட்டி
   தயவாக அருளும் அரங்கனே
2. அரங்கனே உன்பெருமை கூறி
   அகிலமதில் சுபகிருது கலைதிங்கள்
   வரங்களாக மூவாறோர் திகதி குருவாரம்
   (சுபகிருது வருடம் தை மாதம் 19ம் நாள் 02.02.2023, வியாழக்கிழமை)
   வழங்குவேன் அனுகூல ஆசி
3. ஆசிதனை இசைஞானியார் யானும்
   அருளுவேன் உலகநலம் காண
   வாசிவென்ற நிலைகள் அடைய
   வரம்பல கண்டுத் தேறிட
4. தேறிட கலியுக மக்கள்தானும்
   தேசிகனை நம்பி வந்து
   மாறிட வேணும் சைவநெறிக்கு
   மாதருமம் பல செய்து வந்தாலும்
5. வந்தாலும் உயிர்கொலை நீக்கி
   வாழ்க்கையை ஜீவகாருண்யமாக
   சிந்தையூட்டி வந்தால் தான்
   சித்திகள் கைவரக் கூடும்
6. கூடாத பொறிபுலன் வழிவரும்
   குற்றங்களும் விலகி இனிதே
   தடையற ஞான வாழ்வாக
   தவதருமம் நிறைந்த வாழ்வாக மாறும்
7. மாறுதலை செய்ய வந்தநல்
   மாதவசி அரங்கன் கொள்கையே
   ஆறுதலாகப் பரவி நின்று
   அகிலத்தையே சுத்திசெய்யக் கூடும்
8. கூடாத எதிர்வினை ஒழியும்
   குழப்பம் ஐயம்சலனம் அகலும்
   நாடெங்கும் உள்ள யாவும்
   ஞானபண்டிதன் தயவால் நிறைந்தது
9. நிறைந்தது எனும் ஞானமும்
   நீதி வழி நடப்பவர்கட்கே
   அறம் கொண்டு பெரும்பேறு
   அரங்கனால் தான் கிட்டுமெனும்

10. எனும் ஞானம் புரிதலாகி
எல்லாத் திக்கிலும் தேடியலையா
ஞானசபை அரங்கன் வாழும்
ஞானக்குடிலாம் பிரணவக்குடிலின் மேல்

11. மேலான நம்பிக்கை உறுதியாக
முழுமதிதோறும் தொடரும் வாய்ப்பும்
வேலவன் அருள்கிட்டி உயரும்
வெற்றியும் சித்தியும் கைகூடும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–